பாசுரம் - 17

**அம்பரமே தண்ணீரே சோறே அறம் செய்யும் *
எம்பெருமான் நந்தகோபாலா எழுந்திராய் *
கொம்பனரார்க்கு எல்லாம் கொழுந்தே குலவிளக்கே *
எம்பெருமாட்டி யசோதாய் அறிவுறாய் *
அம்பரம் ஊடறுத்து ஓங்கி உலகளந்த *
உம்பர்கோமானே உறங்காது எழுந்திராய் *
செம்பொற்கழலடி செல்வா பலதேவா *
உம்பியும் நீயும் உறங்கேல் ஏலோ ஓர் எம் பாவாய்.**

17-1 **நேச நிலைக்கதவம் நீக்கேல்** என்று சென்ற பாட்டிலே வேண்டி கதவைத் திறந்து உள்ளே விட்டவுடன், நந்தகோபன், யசோதை, கண்ணன், பலராமன் என்ற முறையிலே ஒவ்வொருவரையும் எழுப்பினர்.

17-2 **அம்பரம்** என்னும் வட சொல் ஆடை, ஆகாசம் என்பதை குறிக்கும். முதல் வரியில் வஸ்திரத்தையும், ஐந்தாம் வரியில் ஆகாசத்தையும் சொன்னது.

17-3 **அம்பரமே தண்ணீரே சோறே** என்று ஆடைகளும், குளிர்ந்த தீர்த்தமும், அடிசிலும் இவற்றை வேண்டுபவருக்கும் போதும் போதும் என்று திருப்தி வரும் வரை.

17-4 **அறம் செய்யும்** ஒரு ப்ரதிபலனும் நோக்காது வாரி வழங்கும் தன்மை. தானம் செய்பவன் தர்ம சிந்தனையுடன் செய்ய வேண்டும். (You can't tax deduction for the charity on which you have gained something in return. Like renting a hall in a temple etc.)

17-5 **எம்பெருமான் நந்தகோபாலா எழுந்திராய்** என்பதில் எங்களுடைய ஸ்வாமியான நந்த கோபரே நீர் எழுந்திருக்கவும் என

வேண்டினர்.

17-6 வாரி வழங்கும் வள்ளலான நந்தகோபனை எழுப்பியது தானத்திற்கான கால தேஸ நியமங்களை காட்டியது.

17-7 வஸ்திர தாநம், தீர்த்த தாநம், அந்ந தாநம் இவற்றிற்கு நியமம் உண்டே. பசித்தவனுக்கே சோறு இட வேண்டும். ஜ்ரக்காரனுக்கு அதிகாலையில் தீர்த்த தானமா? தானம் பெற்று பிறருக்கு விற்பவனுக்கா வஸ்திர தாநம்?

17-8 கோபிகைகள் நந்த கோபன் மகிழ்ந்து ஆஹா அங்கே போய் வேண்டியதை ஸமர்த்தியாக வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்வதாக நினைத்துக் கொண்டு நாங்கள் அதற்காக வரவில்லை என்றனர்.

17-9 பின் எதற்காக? என்று நந்த கோபன் வினவுவதாக பாவனை. நாங்கள் வந்தது மூர்த்தி நாநம். அதுவும் ஸ்ரீ மூர்த்தி தாநம். அது கொடுப்பவனுக்கும், வாங்குவனுக்கும் இருவருக்குமே நன்மை செய்யும்.

17-10 அந்த மூர்த்தி என்னிடம் இல்லை என்று சொல்லாதீர்கள். அந்த மூர்த்திதான் அம்பரம் என்றனர்.

17-11 உபனிஷத்தில் தஹர வித்தை என்று ஒன்று. அது இதயத்திற்குள் உள் ஒரு சின்ன இடைவெளி (gap) இருக்கிறது. **அஸ்மிந் அந்தர அகாஸ: தஹர:** என்று அந்த சந்திற்குள் இருக்கும் ஆகாசமே பகவான். அவன் கல்யாண குணங்களை உடையவன். அவனை **அபஹதபாப்மா தஹர: விஜரோ விம்ருத்யு:** என்று எட்டு குணங்களுடன் தனித்தனியே உபாஸனம் செய்ய வேண்டும்.

17-12 அதனால் **அம்பரம்** என்னும் கிருஷ்ணனை அரசனான நீர் எமக்கு கொடுக்க வேண்டும் என்றனர்.

17-13 **தண்ணீரே அம்பரமே** என்பது காளிங்க நர்த்தனத்தி காட்டும். பகவானுடைய திருமேனி, திருவடிக் ஸம்பந்தத்தால் விஷம் கலந்த காளிந்தி ஜலம் சுத்தமானது. ஸகல தாகத்தையும் போக்கிய அம்ப்ரம் கிருஷ்ணனே.

17-14 **சோறே அறம் செய்யும்** என்பது பகவான்தான் அஹம் அந்நம் அந்தர்யாமியான அந்நம். அவன் அந்நாத: அதாவது தன்னை அண்டியவர்களுக்கு அந்நத்தை, தன்னையே கொடுக்கிறவன். அந்த அந்நமும் கிருஷ்ணன்தான். அந்த க்ண்ணனை யமுனைக்கு அழைத்துச் செல்ல வந்தோம் என்றனர்.

17-15 நீர் எத்தனை ஜன்மங்கள் புண்யம் செய்து அவனை மகனாக பெற்றுள்ளீர். நீங்கள் அப்படி அடையாமல் போனால் நாங்கள் எப்படி ஆநந்தத்தை அடைய முடியும் என்றனர்.

17-16 ஓ அதுவா? அவன் அம்மா செல்லம் அவனுடைய அம்மாவை கேளுங்கள் என்று என்று நந்தகோபன் சொல்வதாக பாவனை செய்கின்றனர்.

17-17 **கொம்பனார்க்கு எல்லாம் கொழுந்தே** - வஞ்சிக் கொடி போன்ற பெண்களுக்கு எல்லாம் முதன்மையானவளே.

17-18 கொம்பிற்கு ஒரு கிறை நேர்ந்தால் கொழுந்து வாடுமாப்போலே

17-19 **குல விளக்கே** - குலத்திற்கே ஒரு விளக்கு போன்றவளே.

17-20 அவன் மணி விளக்கு. இவள் குல விளக்கு.

17-21 **எம்பெருமாட்டி யசோதாய்** - எங்கள் ஸ்வாமிநியான யசோதையே

17-22 தேவஸ்திரீகள் பொறாமை கொள்ளும் அழகு வாய்ந்த யசோதையே! மணி விளக்கை நீ அருகில் வைத்துக் கொண்டு ஸகல லோகத்தின் அஞ்ஞானத்தை போக்க வேண்டாமா?

17-23 பகவான் வைகுண்ட நாதன். அவனுக்கோ அப்பா, அம்மா, அண்ணன், தம்பி, அக்கா, தங்கை, பெண் யாரும் கிடையாது. அவனை வேதம் பூர்ணமிதம் என்கிறது. பூர்ணம் என்பது ஒரு பேச்சுதானே. அந்த குறை தீரும்படி நீ உன் தவத்தால் அந்த மணி விளக்கை அடைந்தாய்

17-24 எங்களுடைய அஞ்ஞானம் தீரும்படி அந்த மணி விளக்கை அளிப்பாய் என வேண்டினாள்.

17-25 **அம்பரம் ஊடு அறுத்து ஓங்கி உலகு அளந்த** - **கிருஷ்ணனை பார்த்தவுடன் எங்களுக்கு ஸ்வரூப ஞானம் வந்து விட்டது. ஸ்வரூப ஸாக்ஷத்காரமும் உண்டாயிற்று. அவன்தான் திரிவிக்கிரமன் என தெரிந்தது.**

17-26 முறை தப்பி வரலாமோ என்று கேட்டால் அருச்சுனன் என்ன தபஸ் செய்தான். அவனுக்கு திவ்யமான கன்னை கொடுத்து விச்வரூப தரிசனம் தரவில்லையா?

17-27 ஸத்யம், ஞானம், அநந்தம், ஆன்ந்தமயமான ப்ரம்மம் அம்பரம் ஊடறுத்து நித்ய விபூதி முழுவதும் வரை நிறைந்திருந்தது.

17-28 கதை - கோபிகைகள் வைகுண்டத்தை காட்ட வேண்டினர். கண்ணனும் அவர்களுக்கு பரமபதத்தை காட்டினான்.

17-29 மாக வைகுந்தம் காண்மினே என்பது மதுர கவி வாக்கு.

17-30 கண்ணன் எழிந்திராது கண்டு **யசோதா ஸுப்ரஜா கிருஷ்ணா பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே** என வேண்டினர்.

17-31 அண்ணனான பலராமனை முதலில் எழுப்பாமல் தம்பியை எழுப்புவது சரியல்ல என்று கிருஷ்ணன் இங்கிதமாக தூங்கும் பாவனை செய்வதாக நினத்தனர். அதனால் பலராமனை எழுப்ப சென்றனர்.

17-32 **செம் பொன் கழல்** - சிவந்த பொன்னால் ஆன வீரக் கழல் அணிந்த பலராமன் சிவந்த திருமேனி. னீலாம்பரம். செதாழ்ம்பூ வாசன. இவன் பிறந்த பிறகுதான் கண்ணன். நல்ல காலம் அதன் பின்னே

17-33 கண்ணனோ முகில் வண்ணன் வஸ்திரமோ பீதாம்பரம். வாசனையோ ஸர்வ கந்தம். தமயனைக் கொண்டுதான் தம்பியை அழைத்துச் செல்ல வேண்டும் என்கிற முறை.

17-34 படுக்கையில் உறங்குவார் உண்டு. படுக்கை உறங்குமோ?

17-35 தூங்குபவனை எழுப்பலாமா? எனும் சாஸ்திரத்தில் சில விதி விலக்கு சொல்லாம். ஸம்ஸார தீயில் வாடி வருந்தும் நாங்கள் மோக்ஷத்தை வேண்டி அவன இஎழுப்பினோம்.

17-36 **ஸ்வாபதேசம் -- அம்பரம்** என்றால் தத்வம், **தண்ணீர்** என்றால் ஹிதம், **சோறு** என்றால் புருஷார்த்தம்.

17-37 **வேதம் வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து** (திருவாய்மொழி 4-6-8) என்கிறபடி

ஆசார்யன், பாகவதர்களை முன்னிட்டே எம்பெருமானின் திருக்கல்யாண குணங்களில் ஈடுபடுவோர்.

17-38 திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை வழி படுவோர் துவஜஸ்தம்பத்திற்கு முன்னே ஸாஷ்டங்கமாய் நமஸ்கரித்து, ஆசாரிய, பாகவத, முக்த, நித்யர்களை தியானித்து அவர்களின் அருள் வேண்டியே எம்பெருமானை வணங்குவர்.

17-39 **நந்தகோபன்** - **நந்தன்** என்றால் ஆனந்தம். **கோபன்** என்றால் ரக்ஷகன். இருளிலே தவிக்கும் சேதனர்களுக்கு தத்வ ஹித புருஷார்த்தங்களை அறிவித்து, அதன் மூலமாய் பரம போக்யமான நித்யமான பகவத் அநுபவத்தை அருளி ஜீவர்களை உஜ்ஜீவிக்க செய்யும் ஆசாரியர்களே நந்தகோபர்கள்.

17-40 **நந்த கோபன்** - அளவில்லாத ஆனந்தத்தை அளிக்கும் ஸத் ஸம்ப்ரதாயத்தை ரக்ஷிப்பதாலே ஆசாரியர்கள் நந்தகோபன்.

17-41 **அறம் செய்யும்** - க்யாதி. லாப, பூஜா இவற்றை வேண்டாது, அந்த ஆசாரியர்கள் தார்மிக சிந்தனை கொண்டவர்கள். ப்ரதி பலன் கருதாது வாரி வழங்கும் வள்ளல்கள். சிஷ்யனின் உஜ்ஜீவனமே ஒன்றையே மனத்தில் கொண்டதால் சிறந்தவர்கள்.

17-42 கன்றிடம் எதுவும் வேண்டாது பாலைச் சுரக்கும் தாய்பசு போலே சிஷ்யர்களிடத்து ஔதார்ய சிந்தனை ஒன்றுடனே ஆசாரியர்கள் ஞானத்தை அளிக்கின்றனர்.

17-43 **அம்பரம்**, **தண்ணீர் சோறு** - ஆடை உடுத்தி, தண்ணீர் பருகி, சோற்றை உண்ணும் கிரமத்திலே சொன்னது.

17-44 **அம்பரம்**, **தண்ணீர் சோறு** - அக்ஷ்டாக்ஷர மந்திரத்தை காட்டியது. அம்பரம் - ஓம், தண்ணீர் - நமோ; சோறு - நாராயணாயத்தை காட்டியது.

17-45 ஆண்டாள் பெண்ணாகையாலே ப்ரணவத்தை **அம்** என்று அறிவித்தாள்.

17-46 அம்பரம் என்பது ஆடை. **துலை ஒன்று இலை என நின்ற துழாய் முடியான்** சேதனா சேதனங்களை உடலாய் கொண்டுள்ள சாரீரக சாஸ்திரத்தை காட்டியது. அந்த உடலை ஆடையாக மூடி மறைத்தான்.

17-47 **உடல் மிசை உயிர் என கறந்து எங்கும் பரந்துள்ள** எம்பெருமான் ஸர்வ வஸ்துக்களையும் ஆடையாய் மூடி மறைக்கிறான்.

17-48 **ஓம் ஈசோவாஸ்யம் இதம் ஸர்வம் யத் கிஞ்ச ஜகத்யாம் ஜகத்** என்று மாறுகின்ற இயல்புடைய உலகில் உள்ளவற்றை அனைத்தையும் இறைவனால் நிறைக்கப்பட வேண்டும் என்றது.

17-49 **அந்தர் பஹிச்ச தத்வம்** என்கிறபடி உள்ளும் புறமும் வியாபித்துள்ளான்.

17-50 ஆகாசம் போல் எம்பெருமானின் திருக்கல்யாண குணங்களும் எங்கும் பரந்துள்ளது.

17-51 ஆகாசத்திலிருந்து மற்றைய பஞ்ச பூதங்கள் உண்டானது உபலக்ஷணமாக கொண்டு எம்பெருமானும் அது மாதிரியே. அவனிடமிருந்து எல்லாம் உண்டாயிற்று என்றது.

17-52 **தண்ணீர்** என்பது ஹிதம் - உபாயம். நீரைக் கொண்டே சோற்றை சமைப்பதாலே உபாயம் ஆயிற்று.

17-53 சோறு என்பது பரம புருஷார்த்தமான எம்பெருமானை சொல்லியது. **அஹம் அன்ன** என்கிற உபனிஷத் வாக்கின்படி எம்பெருமான் உயர்ந்த அன்னமாகிறான்.

17-54 **செயல் நன்றாக திருத்திப் பணி கொள்வான்** என்கிறபடியாலே ஆசாரியன் **அறம் செய்யும்** என்று ஆயிற்று.

17-55 சொல்லோடு நிற்காது செயலால் காட்டும் ஞான வைரக்ய அனுஷ்டானத்துடன் கூடிய ஆசாரியனை சொன்னது இங்கே.

17-56 **பீதக ஆடை பிரானர் பிரம குருவாகி** என்கிறபடி ஸாக்ஷாத் எம்பெருமானே ஆசாரியனாக அவதரித்தான்.

17-57 **கொம்பனார்க்கு** என்பதாலே விநயத்துடன் வளைந்திருக்கும் ஆசாரியர்களை சொன்னது. **வித்யா விநய ஸம்பந்நே**

17-58 **ஏற்றி எழில் மனத்து ஞான விளக்கை இருள் அனத்தும் மாற்றிய** ஆசாரியனே குல விளக்கு.

17-59 **எம்பெருமாட்டி** என்பதாலே ஸ்த்ரீ ரூபமான அக்ஷ்டாக்ஷர மந்திரத்தை சொன்னது. மந்திரங்கள் தாய் போலே, உபதேசிக்கும் ஆசாரியன் தந்தை போலே.

17-60 **யசோதை** - யஸஸ்ஸை அளிப்பதாலே அவள் திருநாமம் யசோதை

17-61 **அறிவுறாய்** என்பதாலே எங்களை கடாக்ஷிப்பாய் என வேண்டியது.

17-62 **அம்பரம் ஊடு அறுத்து ஒங்கி உலகளந்த** என்பதாலே தன் திருப்பாதத்தால் எல்லா உலகங்களையும் அளந்த திரிவிக்கிரமனை சொல்லியது.

17-63 **அயர்வறும் அமரர்கள் அதிபதி**யானதாலே **உம்பர்கோமான்.**

17-64 சொத்துக்கு உரிமையாளனே சொத்தை அளக்கமுடியும்.

17-65 **செம்பொற்கழல் அடி** என்று பலராமனைச் சொன்னது.

17-66 **பலதேவா** பலம் பொருந்தியவன். ஸகல வஸ்துக்களையும் தாங்கும் எம்பிரானுக்கு ஸய்யா, ஆஸனமாய் இருப்பவன்.

17-67 அவன் சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்

17-68 நிவாஸ ஸய்யாஸ என்கிறபடி எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் சிம்மாசனமகவும், ஸயனித்திருக்கும் மெத்தையாகவும் இருப்பவன்.

17-69 **செல்வா** இவன் திருநாமமே ஆதிஸேஷன். எம்பெருமானுக்கு பணிவிடை செய்ய கைங்கர்ய லக்ஷ்மியை உடையதால் இவனே செல்வன்.

17-70 **உம்பியும் நீயும்** - உனது தம்பியான கண்ணனும், நீ ஆகிற பலராமனும். அவன் பரம பாகவதன் ஆகையால் அவனை முன்னிட்டே பிராத்தனை.

17-71 வானில் இளவரசு என்பது போலே எம்பெருமான் இளவரசன். நித்ய முக்தர்களே 'அரசர்கள்.

17-72 ப்ரகிருதியில் அவனுக்கு ஸ்வாதந்திரியம். மோக்ஷத்தில் பாரதந்திரியம்.

17-73 ஞானி து ஆத்மைவ மே மதம் என்றான் கண்ணனும். ஞானிகளே என்னுடைய ஆத்மா. இது கிருஷ்ணன் ஸித்தாந்தம்.

17-74 நின் தனக்கு நிகர் நின்னடி அடைவார் என்று மும்மணிக்கோவை